**CC.No.193/2023 (JM.No.II, DHARMAPURI)**

**16.03.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 6 : Dr.மோகன்குமார் ( மருத்துவர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தருமபுரி DNV Ortho Care மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.05.2021 ம் தேதி மதியம் 04.30 மணியளவில் நான் பணியில் இருந்த போது மணி, வயது 51, த/பெ. அருணாச்சலம் என்பவர் தன் மனைவி அம்பிகாவுடன் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவர் கூறிய படி அதே தேதியில் மதியம் 12.00 மணியளவில் புறவடை கீழ் பேட்டையான் கொட்டாயில் நடந்த அடிதடி சம்பவத்தில் ஒரு தெரிந்த நபர் கல்லால் தாக்கி காயம் ஏற்பட்டதாக கூறினார். முதலுதவி தருமபுரி GH ல் சிகிச்சை பெற்று கொண்டு மேல் சிகிச்சைக்காக என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. வலது கையின் சுண்டுவிரலின் உள்பகுதியில் ஒரு நசுங்கிய காயம் காணப்பட்டன. அத்துடன் சுண்டுவிரல் மற்றும் அவற்றின் அடிப்பகுதியின் உள்ளங்கையில் இரண்டு எலும்புகள் சேரும் இடம் பின்பக்கம் தள்ளப்பட்டிருந்தது (Dislocation of Joints). அவரை பரிசோதனை செய்த பின் அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு Reduction of Dislocation என்ற அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை முடித்து பின்பு 03.05.2021 அன்று Discharge செய்யப்பட்டார். மணிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். மணியின் காயச்சான்றிதழ் **<u>அ.த.சா.ஆ.6</u>** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் கூறியததை தான் போலிஸார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். காயம்பட்ட நபரான மணி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை நான் அளிக்கவில்லை என்றால் சரிதான். 01.05.2021 அன்று மாலை 04.30 மணியளவில் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். போலிஸார் என்னிடம் கற்கள் அல்லது ஆயுதங்களை காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருவர் மீது 8–10 செ.மீ நீளமுள்ள, 8 செ.மீ அகலம் உள்ள, 1 கிலோ எடையுள்ள ஒரு கல்லை தூக்கி எறிந்து அடித்தால் அதனை தடுக்கும் போது நடுவிரலில் பட்டு அருகில் உள்ள விரல்களின் மீது பட்டு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால், அந்த கல் எந்த இடத்தில் படுகிறதோ அதை பொறுத்து காயம் ஏற்படலாம். சா.பொ.1 யை 20 அடி தூரத்திலிருந்து தூக்கி எறியும் போது நான் தற்போது சாட்சியத்தில் கூறிய காயங்களை விட அதிகமான காயங்கள் ஏற்படும் என்றால், கல்லை வீசும் வேகத்தை பொறுத்தும் எந்த இடத்தில் கல் படுகிறதோ அதனை பொறுத்தும் காயத்தின் தன்மை இருக்கும். மணி என்பவருக்கு வலது நடுவிரலில் நான் சிகிச்சை எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய மருத்துவமனையில் வலது கை நடுவிரலில் சிகிச்சை அளித்ததாக சாட்சியம் அளித்திருந்தால் அது தவறு என்றால், நடு விரலில் சிகிச்சை அளிக்கவில்லை. விரலின் கீழ் Distal palmer Crease injury க்கு சிகிச்சை அளித்தேன். மேற்படி காயத்தின் Dimensions நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

காயச்சான்றிதழில் சுண்டுவிரலின் கீழ் தான் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நசுங்கிய காயம் உள்ளங்கையின் சுண்டுவிரலின் கீழ் பரவி இருந்தது. ஆனால் அதன் அகலம் மற்றும் அளவு நான் குறிப்பிடவில்லை. சா.பொ.1 னினால் நான் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. ஒருவர் கரடு முரடாண பகுதியில் வேகமாக ஓடி தடுமாறி கீழே விழும் போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால், கீழே விழும் வேகத்தை பொறுத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.03.16 17:51:14 +0530